# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | | |
|---|---|---|
| Summary Trial Case No: | | STC.209/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | **ம.சா.1** |
| Name | : | **சங்கரி** |
| Father's/Husband Name: | | **சரவணன்** |
| Village | : | **அ.மேட்டூர்** |
| Taluk | : | **வேப்பந்தட்டை** |
| Age | : | 36/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.08.2024

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311–ன் கீழ் சாட்சியை மீண்டும் அழைக்க மனு செய்துக்கொள்ளப்பட்டு 30.05.2024 தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார். ) ( எதிரி பிரிபு ஆஜர்)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1(i) திருமணத்திற்கு முன்பு நான் திருச்சி டோல்கேட்டில் வசித்து வந்தேன். 2007 ம் ஆண்டு நான் திருமணம் செய்த கொண்டேன். 2007 ம் வருடத்திற்கு பின்னிட்டு எனது கணவருடன் நான் அ.மேட்டூரில் தான் குடியிருந்து வருகிறேன். எதிரி பிரபு எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது அம்மா வீட்டிற்கு அருகில் குடியிருந்தார். அந்த வகையில் எனக்கு தெரியும். எந் விலாசத்தில் குடியிருந்தார் என்றால் குமரன் தோட்டம், மகாலட்சுமி நகரில் குடியிருந்தார். எத்தனை வருடங்களாக மேற்படி விலாசத்தில் குடியிருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2007 ம் வருடத்திற்கு பின்னிட்டு எதிரி எங்கெங்கு வசித்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வளவாக தெரியாது. 2007 ம் வருடத்திற்கு பின்னிட்டு என்

அம்மா வீட்டிற்கு போக வருகையில் அவரை எனக்கு தெரியும். எனது அம்மாவீட்டிற்கு நான் செல்லும் போது எதிரி எனது அம்மாவிடம் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக எங்கள் வீட்டிற்கு வந்து போவார்.

(ii) எனது அம்மாவிடம் கடன் வாங்கவும், அதை திருப்பி கொடுக்கவும் தான் எதிரி வந்து போவார் என்றால் சரிதான். எதிரி எங்கு வேலை பார்க்கிறார் என்றால் திருச்சி தென்னூர் EB அலுவலகத்தில் வேலை பார்க்கிறார். என்னிடம் பணம் வாங்கியதாக சொல்லப்பட்ட நேரத்தில் எதிரி எங்கு வேலை பார்த்தார் என்றால் மேற்படி தென்னூர் EB அலுவலகத்தில் தான் வேலை பார்த்தார். அலுவலகம் சென்று எதிரியை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் வீட்டுக்குடித்தனம் தான் செய்து வருகிறேன். எந்த பிஸ்னஸ் செய்யவில்லை. எனது கணவர் சொந்தமாக 3 கார்கள் வைத்து டிராவல்ஸ் தொழில் செய்து வருகிறார். என்றைய தேதியில் எதிரி பணம் கேட்டார் என்றால் குறிப்பிட்ட தேதி எனக்கு ஞாபகம் இல்லை. 2015 ம் ஆண்டு முதலே பணம் கேட்டு வந்தார். என்ன காரணத்திற்காக பணம் கேட்டார் என்றால் ரியல் எஸ்டேட் பிஸ்னஸ் செய்ய போவதாகவும் அதில் என்னையும் ஒரு பார்ட்னராக இருந்து கொள்ள சொல்லி கேட்டார். ரியல் எஸ்டேட் பிஸ்னஸில் பிளாட்டை வாங்குவதற்கு முதலீடு செய்ய பணம் தேவைப்படும். எவ்வளவு பணம் எதிரி கேட்டார் என்றால் ரூ.11 லட்சம் கேட்டார். என்னிடம் அவ்வளவு இல்லை என்று சொல்லி ரூ.9,20,500/-ஐ கொடுத்தேன். அவ்வாறு கொடுத்த போது ஏதேனும் நிலத்தின் ஆவணங்களை நான் பாரத்தேனா என்றால் எதிரி காட்ட நான் பார்த்தேன். அது எந்த பகுதி நிலம் என்றால் கூத்தூர் பகுதியில் 1 1/4 ஏக்கர் நிலமாகும். அது யாருடைய பெயரில் இருந்தது என்றால் சாருலதா என்பவரின் பெயரில் இருந்தது.

(iii) ஆவணத்தின் நகலை வாங்கிக்கொள்ளவில்லையா என்றால் வாங்கிக்கொள்ளவில்லை. ஏன் வாங்கவில்லை என்றால் 10 நாளில் கிரையம் எழுதி கொள்வதாக சொன்னதால் வாங்கவில்லை. ரியல் எஸ்டேட் தொழில் செய்ய நானும், எதிரியும் பங்குத்தாரராக இருந்து கொள்ள ஒப்பந்தம் செய்து கொண்டோமா என்றால் இல்லை. 15.10.2016 ம் தேதி ரூ.9,20,500/-ஐ எதிரியிடம் கொடுத்தேன். அ.மேட்டூரில் உள்ள எங்களது வீட்டில் வைத்து கொடுத்தேன். மேற்படி ரூ.9,20,500-ஐ எதிரியிடம் கொடுப்பதற்கு முன்பு என் கைவசம் வைத்திருந்தேன் என்பதற்கு ஆவணங்களை ஏதேனும் வைத்துள்ளேனா என்றால் நகையை அடகு வைத்து எனது அப்பா நிலம்

விற்றதிலிருந்து வந்த அந்த பணத்தை வைத்து தான் மேற்படி தொகையை எதிரியிடம் கொடுத்தேன். நகையை எந்த தேதியில் அடமானம் வைத்தேன் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. ரூ.6 லட்சத்திற்கு அடமானம் வைத்தேன். அதற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். பணம் எதிரியிடம் கொடுப்பதற்கு முன்பு எத்தனை நாட்களுக்கு முன்பு நகையை அடமானம் வைத்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அப்பா சொத்தை விற்று எனக்கு எவ்வளவு பங்கு வந்தது என்றால் ரூ.4 லட்சம் எனக்கு அம்மா கொடுத்தார்.

(iv) 2016ம் வருடம் மேற்படி பணத்தை எனது அம்மா என்னிடம் கொடுத்தார். மாதம், தேதி எனக்கு ஞாபகம் இல்லை. அப்பாவுக்குரிய சொத்தை 2015ம் வருடம் விற்றோம். எதிரி 2015ம் வருடம் என்னிடம் பணம் கேட்டபோது என் கைவசம் பணம் இல்லை என்றால் சரிதான். கூத்தூர் நிலத்தை நான் நேரடியாக சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். நிலம் வாங்கி விற்கும் நடைமுறை தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். இடத்தின் உரிமையாளர் சாருலதாவை நான் பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி இடத்தின் ஒட்டுமொத்த விலை எவ்வளவு சொன்னார்கள் என்றால் ரூ.25 லட்சம் என்று சொன்னார்கள். பாதி தொகையை என்னை தருமாறும், மீதி தொகையை எதிரி கொடுப்பதாகவும் எதிரி என்னிடம் சொன்னார். மேற்படி தொகைக்கு இடம் தகுதியானதா என்பதை சந்தை மதிப்பு விவரங்களை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் அந்த இடத்தின் அருகிலிருந்து நபர்களை விசாரித்து தெரிந்துகொண்டேன்.

iv) 10 நாட்களுக்குள் கிரையம் செய்யாதது குறித்து நான் ஏதேனும் கேட்டேனா என்றால் கேட்டேன். எதிரி பிரபுவும், சதீஷ்ம் கிரையம் பன்னலாம் என்று காலம் தாழ்த்தி வந்தார்கள். பெரிய தொகையை எதிரியிடம் கொடுத்த போது அதற்கு அத்தாட்சியாக ஆவணங்களை எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். எந்த அடிப்படையில் ஆவணங்களை எழுதி வாங்கவில்லை என்றால் அம்மா வீட்டிற்கு அருகில் வசிப்பவர் என்பதால் நம்பிக்கையின் பெயரில் வாங்கவில்லை. காசோலை தொகையை எதிரியிடம் கொடுத்த போது நானும் எனது கணவர் மட்டும் தான் இருந்தோம். வேறு யாரும் இல்லை. அ.மேட்டூரில் உள்ளது எனது கணவரின் சொந்த வீடாகும். காசோலை தொகையை எதிரியிடம் நான் கொடுப்பதற்கு முன்பாகவே எனது அம்மாவிற்கும் எதிரிக்கும் இடையில் பணம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை இருந்து வந்தது

என்றால் சரியல்ல. நான் நன்றாக தான் எதிரியிடம் பேசி வந்தேன். எனது அம்மா இதே எதிரியின் மீது ஸ்ரீரங்கம் நீதிமன்றத்தில் காசோலை விவரம் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் கொடுத்த பணத்திற்காக மேற்படி காசோலை வழக்கு எனது தாயாரால் தாக்கல் செய்யப்பட்டு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு நடந்த விவரங்களை எனது அம்மா என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். இவ்வழக்கு விவரங்களையும் எனது அம்மாவிடம் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

v) பெரம்பலூர் மாவட்ட குற்றபிரிவில் எதிரிக்கு எதிராக நான் புகார் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு முன்னதாகவே எதிரியிடம் நான் காசோலையை வாங்கிவிட்டேனா என்றால் காசோலை வசூலுக்கு செலுத்தி பணம் இல்லாமல் திருப்பப்பட்டதால் தான் மேற்படி புகாரையே கொடுத்தேன். 2019 ம் வருடம் மேற்படி புகாரை கொடுத்தேன். எந்த தேதியில் வழக்கு காசோலையை எதிரி என்னிடம் கொடுத்தார் என்றால் 05.06.2019 ம் தேதி எதிரி என்னிடம் கொடுத்தார். பணத்தை நான் வற்புறுத்தி கேட்டதால் எதிரி காசோலையை கொடுத்தார் என்றால் நான் கொடுத்த பணத்தை கேட்டதற்கு தான் எதிரி காசோலையை கொடுத்தார். காசோலை எண் தெரியுமா என்றால் 000045 ஆகும். எதிரி என்னிடம் காசோலையை வழங்கியதாக சொல்லும் 05.06.2019 ம் தேதிக்கு முன்னதாகவே எதிரிக்கு எதிராக எனது அம்மா காசோலை வழக்கு ஒன்றை தாக்கல் செய்துவிட்டார் என்றால் சரிதான். எனது அம்மா தாக்கல் செய்த காசோலை வழக்கில் உள்ள காசோலை எண். 000044 என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

vi) மேற்படி காசோலை எண். 000044 போதிய பணம் இல்லை என்று தான் திருப்பப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அம்மாவிடம் கொடுத்த காசோலை திருப்பப்பட்ட நிலையில் மீண்டும் கடனுறுதி சீட்டு எழுதி வாங்காமல் எதிரியிடம் காசோலைய மட்டும் எவ்வாறு பெற்று கொண்டீர்கள் என்றால் எதிரி ஸ்ரீராம் சிட்பெண்ட்ஸ் ல் சீட்டு போட்டுள்ளதாகவும் அதில் வரும் பணத்தை என்னிடம் கொடுத்துவிடுவதாகவும் சொன்னார். எதிரி காசோலைய எங்கு வைத்து கொடுத்தார் என்றால் திருச்சி பொன்மலை EB Quarters ல் வைத்து கொடுத்தார். எதிரியிடம் பணம் கொடுத்த தேதிக்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக பணம் தயாராகிவிட்டது என்று எதிரியிடம் சொன்னேன் என்றால் பணம் கொடுத்த தேதிக்கு முந்தைய தினம் சொன்னேன். பணம் கொடுத்த தினத்தின் கிழமை தெரியுமா என்றால் ஞாபகம்

இல்லை. காலை 11.30 லிருந்து 12.00 மணிக்குள்ளாக கொடுத்தேன்.எதிரியின் பொன்மலை Quarters ன் கதவு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அது அடுக்குமாடி குடியிருப்பா அல்லது தனித்தனி வீடுகளா என்றால் தனித்தனி வீடுகள். எதிரியின் தந்தை பெயர் என்ன என்றால் மாணிக்கம் அண்ணாமலை. கடன் கொடுத்த போதே எதிரியின் அப்பா பெயர் மாணிக்கம் அண்ணாமலை என்று எனக்கு தெரியும். ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியின் தந்தை பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். நான் வழக்கறிஞரிடம் சொல்லியிருந்தேன்.

vii) புகார் மனுவின் சங்கதிகளை எனது வழக்கறிஞர் சொல்ல தெரிந்துகொண்டு தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். புகார் மனுவிலும் எதிரியின் தந்தை பெயர் தெரியவில்லை என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் திருச்சி பொன்மலை பகுதியில் EB quarters எப்போதும் இருந்தது இல்லை என்றாலும் எதிரி அந்த quarters ல் எப்போதும் வசித்தது இல்லை என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.3 சட்ட அறிவிப்பில் எதிரி முகவரியின் கதவு எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சட்ட அறிவிப்பை பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன் அனுப்பினேனா என்றால் அவ்வாறு தான் அனுப்பினேன். எதிரி பெற்றுகொள்ளாமல் வேண்டுமென்றே திரும்பி அனுப்பிவிட்டார். வழக்கறிஞர் அறிவிப்பை எந்த வழக்கறிஞர் மூலம் அனுப்பினேன் என்றால் வழக்கறிஞர் திரு. பாலாஜி என்பவர் மூல் அனுப்பினேன். எனது வழக்கறிஞரின் அலுவலகம் திருச்சி டோல்கேட்டில் உள்ளது அங்கு வைத்து தான் அறிவிப்பிற்கான சங்கதிகளை நான் சொன்னேன்.

viii) திருச்சியில் தனரத்தினம் பகுதி எங்கிருக்கிறது என்று தெரியுமா என்றால் நிறைய இடத்தில் உள்ளது. எந்தெந்த இடத்தில் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. சசிகுமார் என்ற வழக்கறிஞரை எனக்கு தெரியாது. ம.சா.ஆ.3 ஆவணத்தில் அதை அனுப்பிய வழக்கறிஞர் திரு.சசிகுமார் தனரத்தினம் நகர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் எனது வழக்கறிஞர் பாலாஜியிடம் தான் வழக்கு பற்றி சொன்னேன். எதிரிக்கு சட்டஅறிவிப்பு அனுப்பப்பட்டதற்கான எந்த ஆவணத்தையும் சட்டப்படியாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு சட்ட அறிவிப்பை சட்டபூர்வமாக நான் அனுப்பாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரி எனது அம்மாவிடம் கடனுக்கு ஈடாக

கொடுத்து வைத்திருந்த காசோலைகள் 000044, 000045 ஆகியவற்றில் தாவா காசோலை எண் 000045–ஐ எனது அம்மா என்னிடம் கொடுத்து எதிரிக்கு எதிராக பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற அழைப்பாணையிலும் எதிரியின் தந்தை பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எதிரியின் தகப்பனார் பெயரை பின்னிட்டு தெரிந்துகொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப எதிரியின் தகப்பனார் பெயரை குறிப்பிட்டு அஞ்சல் உறையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு முன்பே எதிரியின் தந்தை பெயர் தெரியும். வழக்கறிஞர் தான் கவனக்குறைவாக குறிப்பிடாமல் விட்டுவிட்டார். நான் வருமான வரி கணக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை. வருமான வரியும் செலுத்தவில்லை. நான் சொன்ன தேதியில் எதிரி என்னிடம் எந்த தொகையையும் கடனாக பெறவில்லை என்றாலும் எந்த காசோலையும் எதிரி என்னிடம் வழங்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் புகார் சொல்லியுள்ளது போல் நிலத்திற்காக எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றாலும் அதனால் தான் அதற்கு அத்தாட்சியாக எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

ix) காசோலையை எதிரி தான் நிரப்பி கொடுத்தார். என் முன்பு தான் நிரப்பி என் முன்பு தான் கையொப்பம் செய்தார். எதிரி கொண்டுவந்த பேனாவின் மூலமாக தான் காசோலையை நிரப்பி கையொப்பம் செய்து கொடுத்தாரா என்றால் அதிக நாட்கள் ஆகிவிட்டதால் அதுகுறித்து எனக்கு ஞாபகம் இல்லை. ம.சா.ஆ.1 காசோலையில் எதிரியின் கையொப்பம் Ink பேனாவால் செய்யப்பட்டுள்ளதாலும் தொகை தேதி போன்ற விவரங்கள் Ball point பேனாவால் நிரப்பப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். காசோலைய தொகை என் கைவசம இருந்தது என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்ய நான் கடமைபட்டிருக்கிறேன் என்றால் சரிதான். தாவா காசோலைக்ககா எந்த தொகையும் எதிரிக்கு நான் கொடுக்கவில்லை என்றாலும் அதனால் சட்டப்படியான கடனுக்காக காசோலை கொடுக்கப்படாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. எதிரியின் தந்தை பெயரோ, எதிரியின் இருப்பிடமோ தெரியாது என்றாலும் என் அம்மா சொல்லியதன் பேரில் எதிரிக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 15.10.2016 ம் தேதி எதிரி என்னிடம் பணம் வாங்கினார் என்பதை நான் சட்டப்படி நிரூப்பிக்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை